# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 105 /பேரூ/2026**
**நாள் : 22.09.2026**

P. மாணிக்கம்,
சீராப்பள்ளி,
நாமக்கல் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
சீராப்பள்ளி பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம். – எதிர் மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சீராப்பள்ளி, ஐயங்காடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் எதிரில், எண். 68-B, தாரணிராசி நகர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. P. மாணிக்கம் என்பவரது 11.04.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.04.2026 அன்று பெறப்பட்டு, 105/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சீராப்பள்ளி ஐயங்காடு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் எதிரில், எண். 68-B, தாரணிராசி நகர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. P. மாணிக்கம் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 11.04.2026 நாளிட்ட முறையீட்டு மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், சீராப்பள்ளி கிராமம், ஸ்ரீராம் நகர் பாதை ஆக்கிரமிப்பு தொடர்பாக , நான் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் 27.02.2026 அன்று மனு செய்து இருந்தேன். சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலர் ஆக்கிரமிப்பை அகற்ற எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நான் கடந்த 27.02.2026ல் ஆக்கிரமிப்பை அகற்ற மனு கொடுத்து நான் வீடு கட்டுவதற்கு ஸ்ரீராம் நகர் பகுதியில் மின் வாரியத்தில் மின் இணைப்பு கேட்டு 13.02.2026 அன்று பணம் செலுத்தி

60 நாள் ஆகிறது. சுரேஷ்குமார் என்பவர் சீராப்பள்ளி பேரூராட்சிக்கு உட்பட்ட ஸ்ரீராம் நகர் பகுதியில் மின்கம்பம் நடக்கூடாது என தடுத்து வருகிறார். இதற்கு சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலரும் சுரேஷ்குமாருக்கு உறுதுணையாக செயல்படுகிறார். ஸ்ரீராம் நகர் பகுதியில் வேண்டுமென்றே சாலையில் வாழைமரம் வைத்துக்கொண்டு 10 அடிக்கு ஆக்கிரமிப்பு செய்து கொண்டு உயரமாக மண்கொட்டி கொண்டு செயல்படுகிறார். இதற்கு பேரூராட்சி செயல் அலுவலர் துணை போகிறார். எனவே உடனடியாக என் மனுவை விசாரணைக்கு எடுத்து மின்கம்பம் அமைத்து வீடு கட்டுவதற்கு, மின் இணைப்பு பெற வழிவகை செய்யுமாறு தாழ்ந்த பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 28.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலர் (பொறுப்பு) தனது 16.07.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 91/2026ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

“நாமக்கல் மாவட்டம், சீராப்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் திரு. பெ. மாணிக்கம், த/பெ பெரியசாமி என்பவரால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மனுதாரர், மனு எண். 17378735 நாள் 27.02.2026ல் வார்டு எண். 09 சீராப்பள்ளி காட்டுக்கொட்டாய் பகுதியில் ஸ்ரீராம் நகர் பகுதியில் வேண்டுமென்றே சாலையில் வாழை மரம் வைத்துக்கொண்டு 10 அடிக்கு ஆக்கிரமிப்பு செய்து வருபவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வழங்கப்பட்ட மனுவினை தொடர்ந்து, இப்பேரூராட்சி செயல் அலுவலருடன் நேரில் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், மனுதாரர் குறிப்பிடும் பகுதியில் உள்ள குடியிருப்புதாரர்கள் தங்களது வீட்டின் முன்புறம் நிலையான கட்டுமானம் மற்றும் கட்டுமான பொருட்கள் ஏதும் இல்லை என்பதை இதன்மூலம் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் செயல் அலுவலரால் நேரில் ஆய்வு செய்யப்பட்டமைக்கான புகைப்பட நகல் மற்றும் ஏற்கனவே மனுதாரருக்கு வழங்கப்பட்ட பதிலறிக்கையினை இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன் என்பதை பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 11.08.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் ஆஜராகுமாறு 17.07.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. P. மாணிக்கம் என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் 11.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- நாமக்கல் மாவட்டம், சீராப்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட ஸ்ரீராம் நகரில் நான் வீடு கட்டுவதற்காக, மின்கம்பம் அமைக்கக் கோரி 13.02.2026 அன்று மின்வாரியத்தில் உரிய கட்டணம் செலுத்தியுள்ளேன்.

- ஸ்ரீராம் நகரில் மின்கம்பம் அமைப்பதற்கு தடுக்கும் வகையில் சுரேஷ் என்பவர் வேண்டுமென்றே சாலையில் வாழைமரம் வைத்துக் கொண்டு 10 அடிக்கு ஆக்கிரமிப்பு செய்தும் மற்றும் உயரமாக மண்கொட்டி கொண்டும் வருகிறார். இச்செயலுக்கு பேரூராட்சி செயல் அலுவலரும் உடந்தையாக உள்ளார்.

- இவ்வாறு எனது மனைக்கு முன்பு கடந்த இரண்டு ஆண்டுகாலமாக ஆக்கிரமிப்புகள் இருந்த நிலையில் மின்வாரியத் துறையால் கடந்த மூன்று மாதத்திற்கு முன்புதான் மின்கம்பம் அமைத்து மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் வாழைமர ஆக்கிரமிப்புகளை இரண்டு நாட்களுக்கு முன்புதான் (09.08.2026 அன்று) பேரூராட்சியால் அகற்றப்பட்டுள்ளது.
- பேரூராட்சிக்கு சொந்தமான சாலையில் எனது மனைக்கு அருகில் உள்ள சுரேஷ் என்பவர் சுமார் 4 அடி உயரத்திற்கு மண்ணை கொட்டி பேரூராட்சி சாலையினை உயர்த்தியுள்ளதால், போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. இவ்வாறு போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால், எனது மனையில் வீடு கட்டும் பணி மேற்கொள்ள முடியவில்லை.
- எனவே, பேரூராட்சிக்கு சொந்தமான சாலையை சுமார் 200 அடி நீளத்திற்கு மண்ணை கொட்டி சாலையினை சமப்படுத்திட வேண்டும் அல்லது சுரேஷ் என்பவரால் ஆக்கிரமிப்பு செய்து உயர்த்தியுள்ள 4 அடி மண் சாலையினை பேரூராட்சி சாலைக்கு இணையாக சமப்படுத்திட வேண்டும் என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 07.08.2026 நாளிட்ட கடித ந.க. எண். 91/2026ல், தனக்கு உடல்நலம் சரியில்லாத காரணத்தினால், தன்னால் 11.08.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு வர இயலாது எனவும், தனது சார்பாக பேரூராட்சியில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் திரு. சே. யோகேஸ்வரன் என்பவரை விசாரணைக்கு ஆஜராக அனுமதி அளிக்குமாறு கோரியுள்ளார்.

7. சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலரின் கோரிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் ஏற்கப்பட்டது. அதன் அடிப்படையில் எதிர்மனுதாரர் தரப்பில் சீராப்பள்ளி பேரூராட்சியின் இளநிலை உதவியாளர் திரு. சே. யோகேஸ்வரன் 11.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- நாமக்கல் மாவட்டம், சீராப்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 09 ஸ்ரீராம் நகர் பகுதியில் வேண்டுமென்றே வாழைமரம் வைத்து சாலையை ஆக்கிரமிப்பு செய்வதாக மனுதாரர் திரு.. P. மாணிக்கம் என்பவரால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 27.02.2026 நாளிட்ட மனு அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்காணும் பொதுப்பாதையில் போக்குவரத்துக்கு இடையூறாக எவ்வித கட்டுமான பொருட்கள் மற்றும் செடி, கொடிகள் வளர்ப்பதை தவிர்க்க வேண்டி பொதுமக்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதை மனுதாரருக்கு பேரூராட்சியின் 27.02.2026 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மேலும் மனுதாரரால் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ள 11.04.2026 மனு தொடர்பாக, பேரூராட்சி செயல் அலுவலரால் ஸ்ரீராம் நகர் பகுதியில் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் மனுதாரர் குறிப்பிடும் பகுதியில் உள்ள குடியிருப்புதரரர்களின் வீடுகளின் முன்புறம் குடியிருப்புதாரர்களால் வைக்கப்பட்டுள்ள வாழைமரம் மற்றும் இதர செடிகொடிகள் அனைத்தும் பேரூராட்சி சார்பாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. (அதற்கான புகைப்படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

- நிலையான கட்டுமானம் மற்றும் கட்டுமானப் பொருட்கள் ஏதுமின்றி, எவ்வித ஆக்கிரமிப்பும் நடைபெறவில்லை என பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

- மனுதாரர் இடமானது தாழ்வான பகுதியில் அமைந்துள்ளது. அதற்கு எதிர்புறத்திலுள்ள சுரேஷ் என்பவரின் வீட்டிலிருந்து அமையப்பெற்றுள்ள நிலங்கள் அனைத்தும் உயரமான பகுதியில் இயற்கையாகவே அமையப்பெற்றுள்ளது. இவ்விடம் சுமார் 20 அடி அகலமுள்ள சாலையாகும். மனுதாரரின் நிலத்தை உயர்த்துவதற்கு பேரூராட்சி மூலம் மண்கொட்டி நிரப்பிட சாத்தியமில்லை. மேலும் உயரமான பகுதியிலிருந்து தாழ்வான பகுதிக்கு செல்ல ஏற்கனவே சாய்தள பாதை அமைக்கப்பட்டுள்ளது. (அதற்கான புகைப்படம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) மேலும் மனுதாரர் கூறியபடி சுரேஷ் என்பவர் மட்டுமே மண்கொட்டி தனது வீட்டிற்கு மட்டும் உயர்த்திக்கொள்ளவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான சீராப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் பேரூராட்சி இளநிலை உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. P. மாணிக்கம் என்பவர் தனது 11.04.2026 நாளிட்ட புகார் மனுவில், நாமக்கல் மாவட்டம், சீராப்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட ஸ்ரீராம் நகரில் தான் வீடு கட்டுவதற்காக மின்கம்பம் அமைப்பதை தடுக்கும் வகையில் சுரேஷ் என்பவர் சாலையில் வாழைமரம் வைத்து ஆக்கிரமித்தும் மற்றும் உயரமாக மண் கொட்டி கொண்டும் வருகிறார் என புகார் தெரிவித்திருந்த நிலையில், மின்வாரியத் துறையால் கடந்த 3 மாதத்திற்கு முன்புதான் மின்கம்பம் அமைத்து மின் இணைப்பு வழங்கப்பட்டு, இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு 2 நாட்களுக்கு முன்பு வாழைமர ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன என்பதை மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மேலும் மனுதாரரின் மனைக்கு அருகிலுள்ள சுரேஷ் என்பவர் பேரூராட்சிக்கு சொந்தமான மண் சாலையை 4 அடி உயரத்திற்கு மண் கொட்டி பேரூராட்சி சாலையை உயர்த்தி உள்ளதால், அச்சாலையில் போக்குவரத்திற்கு இடையூறாகவும், தனது மனையில் கட்டுமான பணிகளும் மேற்கொள்ள முடியவில்லை என்பதால், பேரூராட்சிக்கு சொந்தமான சாலையை சுமார் 200 அடி நீளத்திற்கு மண்ணை கொட்டி சாலையை சமப்படுத்திட வேண்டும் அல்லது சுரேஷ் என்பவரால் ஆக்கிரமிப்பு செய்து உயர்த்தியுள்ள 4 அடி மண் சாலையை பேரூராட்சி சாலைக்கு இணையாக சமப்படுத்திட வேண்டுமென தெரிவித்திருப்பதை மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

மேற்காணும் மனுதாரரின் புகார் தொடர்பாக எதிர்மனுதாரர் தரப்பில் விசாரணைக்கு ஆஜரான பேரூராட்சியின் இளநிலை உதவியாளர் தனது வாக்குமூலத்தில், மனுதாரரின் மனைக்கு முன்பாக ஆக்கிரமிக்கப்பட்ட வாழைமரங்கள், செடி, கொடிகள் அனைத்தும் அகற்றப்பட்டன எனவும், மனுதாரரின் இடமானது தாழ்வான பகுதியிலும், மனுதாரர் புகாராக தெரிவிக்கும் சுரேஷ் என்பவரின் வீட்டிலிருந்து அமையப்பெற்றுள்ள நிலங்கள் அனைத்தும் உயரமான பகுதியாக இயற்கையில் அமையப்பெற்ற நிலையிலும் சுமார் 20 அடி அகலமுள்ள சாலையில் அமையப்பெற்றுள்ள மனுதாரரின் நிலத்தை உயர்த்துவதற்கு பேரூராட்சி மூலம் மண்கொட்டி நிரப்பிட சாத்தியமில்லை எனவும், இருப்பினும் உயரமான பகுதியிலிருந்து தாழ்வான பகுதிக்கு செல்ல ஏற்கனவே சாய்தள பாதை அமைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்திருப்பதை அறிய வருகிறது.

இந்நேர்வில் பேரூராட்சிக்கு சொந்தமான சமதள பொதுப்பாதையில், ஆக்கிரமிப்பு செய்து மண்கொட்டி உயர்த்தப்பட்டு உள்ளதா என்பது குறித்தும், மனுதாரர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி , பேரூராட்சி பொதுப்பாதையை சமதளமாக செய்திட வழிவகைகள் உள்ளனவா என்பது குறித்தும் மண்டல பேரூராட்சிகளின் செயற் பொறியாளர் மூலம் தல ஆய்வு செய்து அவரின் அறிக்கையை 3 மாத காலத்திற்குள் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ

பெறுநர்

1. திரு. P. மாணிக்கம்,
68-B, தாரணிராசி நகர்,
ஐயங்காடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் எதிரில்,
சீராப்பள்ளி, நாமகிரிப்பேட்டை, இராசிபுரம்,
நாமக்கல் மாவட்டம் - 637 406.
2. செயல் அலுவலர்,
சீராப்பள்ளி பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை--600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer), (பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
சென்னை–600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

25/9/26
செயலாளர்.
25/9/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032